# அகநானூற்றில் தொல்காப்பிய வண்ணம்

**முனைவர். க.கலாவதி**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோவை

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தொல்காப்பியர் கூறும் செய்யுளுறுப்புகளில் ஒன்று வண்ணம் ஆகும். வண்ணம் என்பதைக் குறிப்பிட்டு தொல்காப்பியர் கூறவில்லை என்றாலும். அதன் வகைகளை மட்டும் இருபது என வரையறை செய்துள்ளார். வண்ணம் என்பது பாடலின் ஓசையாகிய அலைகள் மீண்டும்மீண்டும் வருவது ஆகும்.

**வண்ணம் - விளக்கம்**

பாடலில் நிகழும் ஓசை வேறுபாடு சந்தம் அமைய - ஆக்கப் பெறுவது வண்ணம் எனலாம். வண்ணத்திற்கு உறுப்பாக அமைவன குறிலும், நெடிலும், அளபெடையிரண்டும், வல்லினமும், மெல்லினமும், இடையினமும், ஆய்தமும். ஆகும் என வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது. இராகம், குணம், சந்தம், சாந்துப்பொது, நிறம், அழகு நன்மை, வடிவு என பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி குறிப்பிட்டுள்ளது. அழகு, இராகம், ஒப்பனை, குணம், சந்தம், சந்தனம், சாந்துப்பொது, செயல், நன்மை, நிறம், வடிவு, விதம், வகை, முடுகியல், வாசனை என மதுரைத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிட்டுள்ளது.

வண்ணம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல் ரிதம் (Rhyme) எனப்படும். பொருளின்றியும், பொருளோடும் வரும் ஓசை நயத்தால் இன்பம் தரும். பாவின்கண் நிகழும் ஓசை விகற்பமாகிய சந்த வேறுபாடே (Different Kind of Rhythm) வண்ணம் எனப் பேராசிரியரும், எழுத்து வகையான அமையும். சந்தக்கூறுபாடே (Variety of Rhythm) வண்ணம் என நச்சினார்க்கினியரும் கூறியுள்ளனர் எனகிறது தொல்காப்பிய வண்ணநூல்.

**வண்ணங்களின் தோற்றம்**

ஆதியில் பேச்சு வழக்கில் இருந்த ஓசையலைகள் பின்னர்ப் பாடலில் வரலாயின. சான்றாக,

**தக்கு புக்கு என்று நடக்கின்றான்**
**நாயாய்ப் பேயாய் அலைகிறான்**
**சள்ளு புள்ளுன்னு விழுகிறான்**
**வழவழா கொழாகொழா என்று பேசாதே**
**சட்டு புட்டுன்னு கிளம்பு**

என்னும் இச்சொற்றடியில் ஓசையடுக்கு வருவதைக் காணலாம்.

காலம் செல்லச்செல்ல எழுத்துகளும், ஒலியின் அடுக்குகளும் பாடலில் இடம் பிடித்தன. இலக்கண நூல்களுக்கு முன்னர் தோன்றிய இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்துள்ளார் தொல்காப்பியர்.

வண்ண இலக்கணத்தின் காலம் வரலாற்றில் சுமார் கி.மு 700 ஆண்டுகட்கு முந்தியது எனலாம் எனத் தமிழிசைக் கலைக்களஞ்சியம் வரையறை செய்துள்ளது. குறில், நெடில் அமைப்பில்தான் தாளமும், தாளமுழுக்குகளும் பண்ணின் சுவை நீர்மைகளும் (தன்மைகளும்) பாடல் வடிவுகளும் தோன்றின எனத் தமிழிசைக் கலைக்களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியர் ஓசை உறுப்பாகவே வண்ணத்தை வரையறுத்துள்ளார்.

**வண்ணங்களின் வகைகள்**

தொல்காப்பியர் வண்ணம் என்பதை வரையறுத்துக் குறிப்பிடவில்லை. ஆனால் அதன் வகைகளை வரையறுத்துள்ளார்.

**வண்ணந் தாமே நாலைந் தென்ப (தொல்.:513)**

என்னும் நூற்பா வழி வண்ணங்கள் இருபது வகைப்படும் என்பததை அறியலாம்.

**அவைதாம்**
**பாஅ வண்ணம் தாஅ வண்ணம்**
**வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்**
**இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்**
**நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்**
**சித்திர வண்ணம் நலிபு வண்ணம்**
**அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்**
**ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்**
**எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்**
**தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்**
**உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று**
**ஆங்கென மொழிப அறிந்திசி னோரே (தொல்: 514)**

என்ற நூற்பா வழி இதனை அறியலாம். பா வண்ணம் தொடங்கி முடுகு வண்ணம் ஈறாக இருபது வண்ணங்களைக் குறிப்பிடுகின்றார். குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் எனும் நான்கும் சேரும்போது இருபது வண்ணம் உண்டாகும். அவை தூ ங்கிசை, ஏந்திசை, அடுக்கிசை, பிரிந்திசை, மயங்கிசை என்னும் ஐந்தினோடு உறழ நூறு வண்ணங்கள் உண்டாகும் என்று இளம்பூரணர் குறிப்பிடுகிறார்.

**வண்ணங்களின் பகுப்பு**

இருபது வகையான வண்ணங்களை ஐந்து வகையான பகுப்பினுள் அடக்கலாம் எழுத்தோசைகளின் நீளம் பற்றிய வண்ணங்களாக குறில் வண்ணம், நெடில் வண்ணம், குறில்நெடில் வண்ணம், சித்திர வண்ணம், என்னும் நான்குவகை வண்ணமும் இவ்வகையில் அடங்கும். மேலும் எழுத்தோசைகளின் தன்மை பற்றிய வண்ணங்களாக வல்லின வண்ணம், மெல்லின வண்ணம், இடையின வண்ணம், ஒழுகு வண்ணம், நலிபு வண்ணம் என்னும் ஐவகை வண்ணத்தை இவ்வகையில் அடக்கலாம். எழுத்தின் காலவேகம் பற்றிய வண்ணங்களாக, உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்னும் இவ்விரண்டு வகை வண்ணத்தையும் அமைக்கலாம். யாப்பு பற்றிய வண்ணங்களாக பாஅ வண்ணம், தாஅ வண்ணம், ஏந்தல் வண்ணம், ஒடூஉ வண்ணம், அளபெடை வண்ணம், தூங்கல் வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், என்னும் எட்டு வகை வண்ணமும் யாப்புறுப்பு வண்ணங்களாக வகைப்படுத்தலாம். பாடலின் கருத்துப் பொருள் பற்றிய வண்ணங்களாக அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம் எண்ணு வண்ணம், என வண்ணங்களை அவற்றின் தன்மை கண்டு பகுக்கலாம்.

**வண்ணவகைப் பட்டியல்**

| எழுத்து | சொல் | தோகை | ஓசை | வடிவம் |
|---|---|---|---|---|
| வல்லிசை வண்ணம்<br>மெல்லிசை வண்ணம்<br>இயைபு வண்ணம்<br>நெஞ்சீர் வண்ணம்<br>குறுஞ்சீர் வண்ணம்<br>சித்திர வண்ணம்<br>நலிபு வண்ணம் | பாஅ வண்ணம்<br>எண் வண்ணம்<br>ஏந்தல் வண்ணம் | தாஅ வண்ணம்<br>அளபெடை<br>வண்ணம் | ஒழுகு வண்ணம்<br>ஒடுஉ வண்ணம்<br>அகைப்பு வண்ணம்<br>தூங்கல் வண்ணம்<br>உருட்டு வண்ணம்<br>முடுகு வண்ணம் | அகப்பாட்டு வண்ணம்<br>புறப்பாட்டு வண்ணம் |

**பாஅ வண்ணம்**

இருபது வண்ணங்களில் முதல் வண்ணமாகப் பாஅ வண்ணத்தைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இது சொற் சீரடியாகி நூலில் பயின்று வருவது ஆகும்.

**பாஅ வண்ணம்**
**சொற்சீர்த்து ஆகி நூற்பாற் பயிலும்** **(தொல்.:515)**

என்ற நூற்பா பதிவு செய்கின்றது. பாடலில் சொல்லே சீராக வந்து நின்று பரந்த ஓசைப்பட்டு நிற்கும். “பா“ என்பது பரந்த ஓசை, பரந்து பட்டு செல்வதோர் ஓசை என்று பேராசிரியர் குறிப்பிடுகின்றார். எனவே பாஅ எனப்பெயர் பெற்றது. தொல்காப்பியம் பாஅ வண்ணத்திற்குரிய நூலாகத் திகழ்கின்றது.

**அன்னாய்! வாழி! வேண்டு, அன்னை! நின் மகள்** **(அகம் :48:1)**
**புலி புலி! என்னும் பூசல் தோன்ற** **(அகம்: 48:7)**

என்னும் அகநானூற்றுப் பாடலடிகள் சொற்சீரடியாய் நின்றது போல் சிலப்பதிகாரத்திலும்

**பெண் அணங்கே (இது சொற்சீரடி)**
**கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று**
**வெள்வேல் கொற்றம் காண்**

என்ற வரிகளில் சொற்சீரடியாய் பாஅ வண்ணம் பயின்று வந்துள்ளது.

**தாஅ வண்ணம்**

இடையிட்டு வந்த எதுகை தாஅ வண்ணமாகும். ஓரடி விடுத்து அடுத்த அடி எதுகையில் அமைவதாகும். முதல் அடியும் மூன்றாம் அடியும் எதுகையில் அமைவது தாஅ வண்ணம் என்று உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். தாஅ என்பத தாவுதல், தா என்றால் பாய்தல் எனப்படும். இதனையே,

**தாஅ வண்ணம்**
**இடையிட்டு வந்த எதுகைத்த ஆகும்** **(தொல்.:516)**

என்ற நூற்பா எடுத்துரைக்கின்றது. தாவிவரும் துள்ளலோசையும் தாஅ வண்ணம் எனப்படும்.

**தோடார் எல்வளை நெகிழ நாளும்**
**நெய்தல் உண்கண் பைதல் கலுழ**
**வாடா அவ்வரி தகைஇப் பசலையும்**
**வைகல் தோறும் பைப்பயப் பெருக**
**நீடார் இ∴கென நீமனங் கொண்டோர்**
**கேளார் கொல்லோ அறுமுகந் தெழிலி**
**வாடாப் பௌவம் அறுமுகந் தெழிலி**
**பருவஞ் செய்யாது வல்னோ்பு வளை,**
**ஓடா மலையன் வேலிற்**
**கடிது மின்னும் கார்மழைக் குரலே**

என்ற இப்பாடலில் 1,3,5,7,9 ஆகிய அடிகளில் தோடா, வாடா, நீடா, வாடா, ஓடா என்னும் சொற்களில் இரண்டாவது எழுத்தாகிய "டா" ஒத்துள்ளதைக் காணலாம். இவ்வாறு இடையிட்டு வந்தால் (தாஅ = தாவுதல்) தாஅ வண்ணம் ஆகும்.

தாஅ வண்ணத்தில் பொழிப்பு எதுகை, மேற்கதுவாய் எதுகை, கீழ்க்கதுவாய் எதுகை, ஒரூஉ எதுகை என நால்வகை எதுகை குறிப்பிடப்படுகின்றன. அகநானூற்றில்,

**பொழிப்பு எதுகை சீர் (1,3)**

**மறி ஆடு மருங்கின் மடப் பிணை அருந்தி (அகம்:34:6)**
**நிலம் கிளை நினைவினை நின்ற நிற்கண்டு (அகம்:39:18)**

**ஒரூஉ எதுகை சீர் (1,4)**

**அன்று அவர் குழீஇய அளப்பு அருங் கட்டூர் (அகம்:44:10)**
**விலங்கு அமர்க் கண்ணள் விரல் விளி பயிற்றி (அகம்:54:20)**

**கீழ்க்கதுவாய் எதுகை சீர் (1,2,4)**

**பழம் பல் நெல்லின் பல் குடிப் பரவை (அகம்:44:16)**
**கன்று காணாது புன் கண்ண செவி சாய்த்து (அகம்:63:10)**

**பொழிப்பு மோனை சீர் (1,3)**

**மீன் முள் அன்ன வெண் கால் மாமலர் (அகம்:26:2)**
**மலி பெயல் கலித்த மாரிப் பித்திகத்துக் (அகம்:42:1)**

**ஒரூஉ மோனை சீர் (1,4)**

**அழிவு இல் உள்ளம் வழிவழிச் சிறப்ப (அகம்:47:1)**
**தண் கயத்து அமன்ற வண்டு படுதுணை மலாப் (அகம்:59:1)**

**கீழ்க்கதுவாய் மோனை சீர் (1,2,4)**

**புலவுப் புலி துறந்த கலவுக் கழி கடு முடை (அகம்:97:3)**

என்னும் பாடலடிகள் பொழிப்பு, கீழ்க்கதுவாய், ஒரூஉ எதுகைக்கு சான்றாக அமைந்துள்ளன. மேற்கதுவாய் எதுகைக்கு அகப்பாட்டில் சான்று இல்லை.

**வல்லிசை வண்ணம்**

வல்லெழுத்துக்கள் மிகுந்து வருதல் வல்லிசை வண்ணம் ஆகும் என்பதனைத் தொல்காப்பியர்,

**வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே (தொல்:517)**

என்னும் நூற்பாவில் குறிப்பட்டுள்ளார்.

அகநானூற்றில் வரும் வல்லின வண்ணங்கள்

**நீர் நிறம் கரப்ப, ஊழுறுபு உதிர்ந்து (ப)**
**பூமலர் கஞலிய கடு வரற் கான் யாற்று (ற) (அகம்:18:12)**
**எக்கர்ப் புன்னை இன் நிழல் அசைஇ (த) (அகம்:20:3)**
**வல் வாய்க் கணிச்சி கூழ்ஆர் கோவலர் (ச) (அகம்:21:22)**

என்ற இப்பாடல்களில் வல்லிசை வண்ணம் பயின்று வருவதை அறிய முடிகின்றது.

**மெல்லிசை வண்ணம்**

மெல்லின எழுத்துக்கள் மூக்கொலி கலந்து ஒலிப்பனவாகும். இவ்வெழுத்துகள் மிகுந்தொலித்தல் மெல்லிசை வண்ணம் எனப்படும். இதனை,

**மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே (தொல்:518)**

என்னும் நூற்பா பதிவு செய்துள்ளது. அகநானூற்றில்,

**மென் தோள் அஞ்ஞை சென்ற ஆறே (ஞ) (அகம்:15-19)**
**கண்ணியது உணரா அளவை ஒண்ணுதல் (ண) (அகம்5-6)**
**பெருங் கடற் பரப்பில் சேயிறா நடுங்க (ங) (அகம்:60:1)**
**உன்னம் கொள்கையொடு உளம் கரந்து உறையும்**
**அன்னை சொல்லும் உய்கம் என்னதூஉம் (ன) (அகம்:65:1-2)**

என்ற பாடலடிகளில் மெல்லினங்கள் பயின்று வந்துள்ளதைக் காணலாம்.

### இயைபு வண்ணம்

**இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே (தொல்:519)**

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார். இடையின எழுத்துக்கள் ஆறும் மிகுதியாகப் பயின்று வருவது இயைபு வண்ணம் எனப்படும். இது வல்லினத்திற்கும், மெல்லினத்திற்கும் இடையாய ஓசையைப் பெற்று வரும். அகநானூற்றில்,

**கூன முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற**
**மீன் முள் அன்ன, வெண் காவ் மா மலர் (அகம், 26:1-2)**
**மலர் தார் மார்பன் நின்றோற் கண்டோர்**
**உள்ளினை வாழி என் நெஞ்சே! – கள்ளின் (அகம்:343:16)**

என்னும் பாடலடிகளில் இயைபு வண்ணம் பயின்று வருவதைக் காணலாம்.

### அளபெடை வண்ணம்

ஓர் எழுத்து தனக்குரிய மாத்திரையிலிருந்து மிகுந்து ஒலிப்பது அளபெடை ஆகும். தூ ரத்தில் இருப்பவருக்குச் செய்தி அறிவிக்க எழுந்ததே அளபெடையாகும். ஒற்று அளபெடுப்பது ஒற்றளபெடை. ம்,ன்,ய்,ல்,ண்,ந் ஆகிய இவ்வொற்றுகள் இன்னோசை தந்து அளபெடுத்து ஒலித்தல் அளபெடை வண்ணமாகும். உயிர் எழுத்துக்கள் எல்லாம் அளபெடுத்து ஒலிக்கக்கூடியன.

### உயிரளபெடை வண்ணம்

உயிர் எழுத்துக்கள் எல்லாம் நீண்டு ஒலிப்பது உயிரளபெடை ஆகும். சான்றாக.

**சுடர் மணிப் பெரும் பூண் ஆஅய் காதைதுத் (அகம்:69:18)**
**கடும் பரிக் குதிரை ஆஅய் எயினன் (அகம்:148:7)**

என்ற அகநானூற்றுப் பாடலடிகளில் உயிர்நெட்டெழுத்து அளபெடுப்பதைக் காணலாம்.

### நெடுஞ்சீர் வண்ணம்

நெட்டெழுத்துக்கள் பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணம் ஆகும். ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்னும் ஏழிசை வழியாக நெடில் எழுத்துக்கள் இசையில் நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிக்கும் போது ஓசை இனிமை பெறும். இதனையே ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்தென்ப என்றார் தொல்காப்பியர். ஓசை மிக்கு வரும் நெட்டெழுத்தினை,

**நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும் (தொல்:1476)**

என்ற நூற்பாவில் நெடுங்சீர் பயின்று வருவதனை குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகின்றது.

அகநானூற்றில்,

**ஆழல் - வாழி தோழி – சாரல் (அகம்:85:5)**
**வரூஉம் என்றனரே, காதலர்**
**வாராய் - தோழி (அகம்:285:14-15)**

என்ற பாடலில் நெடுஞ்சீர் பயின்று வருவதைக் காணலாம்.

**குறுஞ்சீர் வண்ணம்**

குற்றெழுத்துக்கள் மிகுதியாகப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணம் எனப்படும். இதனை,

**குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும் (தொல்: 1477)**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். குறில் எழுத்துக்களைக் கொண்டு சீர்கள் பயின்று வந்து பொருள்பட நிற்பது குறுஞ்சீர் வண்ணமாகும்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக (குறள்:391)**

என்னும் குறள் குறுஞ்சீர் வண்ணத்தைக்கொண்டு பொருள் முற்றுப்பெற்று அழகாக நிற்பதை உணர முடிகின்றது. சொற்களானது இயைபைக் கூறுவதைப்போன்று அடுக்கடுக்கி வருவதை இக்குறள் தெளிவாகக் காட்டுகின்றது.

**மனைமரம் ஒசிய ஒற்றிப்**
**பலர் மடி கங்குல் (அகம்:58:13-14)**
**கன்று பயிர் குரல மன்று நிறை புகுதரும் (அகம்: 64:14)**

என்னும் அகப்பாடல் குறுஞ்சீர் வண்ணம் பெற்று ஒ,இ,அ ஓசையுடன், பொருள் மேலிட்டு ஒலித்து வருவதைக் காணலாம்.

**சித்திர வண்ணம்**

சித்திர வண்ணம் என்பது நெட்டெழுத்துக்களும் குற்றெழத்துக்களும் சேர்ந்து வருவதாகும். சில திற வண்ணம் என்னும் தொடர் மொழி சில்+திற+வண்ணம்+சிற்றிறவண்ணம்>சித்திரவண்ணம் என்றாயிற்று என்று அடிகளாசிரியர் விளக்கந்தருவார்.(ப:329) திரம் என்றால் திரண்ட என்று பொருள். குறில் நெடில் இரண்டும் திரண்டு வரப் பாடுவது சித்திர வண்ணம் ஆகும்.

**நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே (தொல்:1478)**

என்று நூற்பா வழி விளக்கம் தருகின்றார் தொல்லாசான். தொல்காப்பியர் குறிப்பிடும் இச்சித்திர வண்ணத்திற்குச் சங்க இலக்கியத்தில் மிகுதியான பாடல்களைச் சான்றாகக் கூறலாம்.

**இல்லோர்க்கு இல் என்று இயைவத கரத்தல்**
**வல்லா நெஞ்சம் வலிப்ப, நம்மினும்**
**பொருளே காதலர் காதல்**
**அருளே காதலர் என்றி நீயே (அகம்:53:13-16)**

என்னும் அகநானூற்றுப் பாடலில் சித்திர வண்ணம் இயல்பாய் பயின்று வருவதைக் காணலாம்.

**அகப்பாட்டு வண்ணம்**

பாட்டின் முடிவை விளக்கிவரும் இறுதி அசை ஏகாரம் முதலியவற்றான் முடியாது, இடையில் வரும் அடிகள் போல் முடியாத தன்மையால் முடிந்து நிற்பது அகப்பாட்டு வண்ணம் ஆகும்.

**குரங்குகளைப் பொலிந்த கொய்சுவற் புரவி (அகம்,பா:4:8)**

என்னும் இப்பாடலடி பொருள் பற்றிய வண்ணம் ஆகும். அகப்பொருள் பற்றிய பாடல்களில் உள்ளுறை, இறைச்சி முதலிய பொருள்கள் பாட்டிற்குப் புறத்தே பெறப்படுவதால், முடிந்தது போலத் தோன்றினாலும் பொருள் முடியாமல் தொடரும்.

**இன்று வாராராயினும் என்ன?**

என்ற பாடலடின் முதல் பகுதியில் பொருள் முடியவில்லை. ஆனால் நாளை வருவார் என்று பொருள்பட்டதால் இது அகப்பாட்டு வண்ணம் ஆகும்.

**புறப்பாட்டு வண்ணம்**

புறப்பாட்டு வண்ணத்தில் பொருள் முடிந்தது போலத் தோன்றினாலும் முடியாமல் தொக்கி நிற்கும்.

**முடிந்தது போன்று முடியாத தாகும் (தொல்:1481)**

என்ற நூற்பா இதனைக் குறிப்பிடுகின்றது. அகனூற்றில்,

**துணைப் பயிர்ந்து அகவும் துணை தரு தண் கார்**
**வருதும் யாம் எனத் தேற்றிய**
**பருவம் காண் அது (அகம்:85:13-15)**

என்ற பாடலில் புறப்பாட்டு வண்ணம் பயின்று வருவதை அறிய முடிகின்றது. தலைவன் பொருள்வயிற் பிரிந்தான், பிரிந்தவன் கார் முந்துமுன் என் தேர் முந்தும் எனக் கூறிச் சென்றான். ஆனால் தலைவன் பிரிவை எண்ணி தலைவி பெரிதும் வருந்துகின்றாள். அதைக் கண்ட தோழி கார்கால இயல்பை எடுத்துக் கூறி தலைவன் விரைந்து வருவார் என தலைவியை தேற்றுகின்றாள். இப்பாடலில் தலைவன் தான் கார்காலம் தொடங்கும் முன் வருவேன் எனக் கூறிச் சென்றது பொருள் முடிந்ததுபோல் தோன்றினாலும் முடியாமல் தொக்கிநின்று இப்பாடல் புறப்பாட்டு வண்ணத்திற்குச் சான்றாக அமைந்துள்ளதைக் காணலாம்.

**ஒழுகு வண்ணம்**

ஓடைநீர் போல இமையுறாத ஓசை ஒழுகிச் செல்வது ஒழுகு வண்ணமாகும்.

**ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும் (தொல்,:1482)**

என்னும் நூற்பாவழி எடுத்துரைத்துள்ளார்.

**செல்க தேரே – நல் வளம் பெறுந**
**பசை கொல் மெல் விரல், பெருந் தோள், புலைத்தி**
**துறை விட்டன்ன தூமயிர் எகினம்**
**துணையோடு திளைக்கும் காப்புடை வரைப்பில்**
**செந் தார்ப் பைங் கிளி முன்கை ஏந்தி**
**இன்று வரல் உரைமோ, சென்றிசினோர் திறத்து என**
**இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென**
**மழலை இன்சொல் பயிற்றும்**
**நாணுடை அரிவை மாண் நலம் பெறவே (அகம்:34:10-18)**

என்னும் அகநானூற்றுப் பாடல் ஒழுகிசை வண்ணத்திற்கு சான்றாய் அமைந்துள்ளது. ஓடைநீர் போல தான் சொல்லக் கருதிய பொருளைத் தலைவன் இடையாறாது சொல்வது இவ்வண்ணமாகும்.

**ஒரூஉ வண்ணம்**

ஒரூஉ வண்ணம் என்பது செந்தொடை ஆகும். எல்லாத் தொடையும் செந்தொடையால் தொடுத்தால் அது ஒரூஉ வண்ணம் எனப்படும். நீங்கின தொடையாகிக் கிடப்பது எனத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். இதனை,

**ஒரூஉ வண்ணம் ஒரூஉத் தொடை தொடுக்கும் (தொல்: 1483)**

என்னும் நூற்பாவால் அறியலாம். ஓசை நயம் குன்றாமல் சீரிய நடையின்பம் படத்தொடுப்பதே செந்தொடையாகும். ஆசிரியபா வகையில் அமைந்த அகநானூறுப் பாடல்கள் செந்தொடைக்குரிய சொற்கள் அல்லது சீர்களைக்கொண்டு இயல்பாய் நின்றுதொடுத்து வருகின்றன. இருப்பினும் எதுகை, மோனை, இணை போன்றவையும் அகநானூற்றுப் பாடல்களில் பயின்று வருவதைக் காணலாம்.

**ஒரு நாள் விழுமம் உறினும் வழி நாள்**
**வாழ்குவள் அல்லள் என் தோழி: யாவதும்**
**ஊறு இல் வழிகளும் பயில வழங்குநர் (அகம்:18:9-11)**

**வாங்கு கை தடுத்த பின்றை ஓங்கிய**
**பருதி அம் குப்பை சுற்றி பகல் செல** **(அகம்:37:14-15)**

என்னும் பாடல்கள் செந்தொடைக்குச் சான்றாக அமைந்துள்ளன.

**எண்ணு வண்ணம்**

எண் பயின்று வருவது எண்ணு வண்ணம். எண்ணு வண்ணம் செவ்வெண்ணினாலும், உம்மை எண்ணினாலும் பிறவற்றாலும் பயின்று வரும். செவ்வெண் என்பது நிலம் நீர் கலந்து வருவதும், உம்மை எண் என்பது நீரும் நிலமும் கலந்து வருவதும் ஆகும். எண் என்பது நிலம் நீர் என இரண்டும் என்று அமைவதாகும். இதனையே,

**எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்** **(தொல்:1484)**

என்னும் நூற்பா வழி பதிவு செய்துள்ளார் தொல்காப்பியர். சான்றாக,

**நிலம் நீர் வளிவிசும் பென்ற நான்கின் (4) எண் அளப்பரியையே**
**நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல் (4) எண்**
**ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை (5) எண்**

என்னும் பாடல் வழி எண்ணு வண்ணத்தை அறியலாம் நிலமும், நீரும், வளியும், விசும்பும் என்று எண் பயின்று வந்துள்ள அகநானூற்றில்,

**நுதலும், தோளும், திதலை அல்குலும் - (4)**
**வண்ணமும், வனப்பும், வரியும் வாட – (3)**
**வருந்துவள் இவள்** **(அகம்:119:1-3)**

என்னும் பாடலில் பொருள்பட எண்ணிக்கையில் எண்ணு வண்ணம் வருவதைக் காணலாம் தலைவன் விரைந்து வந்து திருமணம் செய்யாததால் தலைவியின் நுதலும், தோளும், திதிலையும் அல்குலும், வண்ணமும் வனப்பும், வரியும் வாடி இருப்பதை பொருள் எண்ணிக்கையில் (உறுப்புகளை) எண்ணு வண்ணத்திற்குச் சான்றாய் அமைகின்றன.

**அகைப்பு வண்ணம்**

குறில், நெடில் இரண்டும் மாறிமாறி அமைந்து ஓர் ஒழுங்கின்றி அறுத்தறுத்து ஓசை அமைவது அகைப்பு வண்ணமாகும் என்பதனை,

**அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும்** **(தொல்: 1485)**

என்னும் நூற்பா வழி அறியலாம். அகநானூற்றில்,

**நோற்றோர் மன்ற தாமே கூற்றம்**
**கோளுற விளியார், பிறர் கொள விளிந்தோர்** **(அகம்:61:1-2)**

என்னும் பாடல் அகைப்பு வண்ணத்திற்கு சான்றாய் அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. வாரா ராயினும் என ஒருவழி நெடிலும், வரினும் என ஒரு வழிக் குறிலும் பயின்று ஓசை அறுத்து நிற்றலின் அகைப்பு வண்ணமாயிற்று. அகநானூற்றில் பெரும்பாலான இடங்களில் அகைப்பு வண்ணம் பயின்று வருவதைக் காண முடிகின்றது. புலவர் தாம் கூறக் கருதியப் பொருளை மையமாகக்கொண்டே. சொற்களை அறுத்தறுத்து ஓசை நயமுடன் அகைப்பு வண்ணமாய் கூறுகின்றார் என்பதை இதன் மூலம் உணர முடிகின்றது.

**தூங்கல் வண்ணம்**

வஞ்சியுரிச்சீர் பயின்று வருவது தூங்கல் வண்ணமாகும். அதனாலேயே 'தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும் என்றார் தொல்காப்பியர்.

**வசையில்புகழ் வயங்கு வெண்மீன்**
**திசைதிரிந்து தெற்கேகினும்**
**வசை/யில் புகழ் = நிரை நேர் நிரை**
**வயங்கு/வெண்=மீன் = நிரைபு நேர் நேர்**

என்னும் பாடலடியில் வரியில் வஞ்சியுரிச்சீர் பயின்று தூங்கலோசைகொண்டு முடிந்திருப்பதைக் காணலாம். அகநானூற்றில்,

**முழங்கும் இரும் பௌவம் இரங்கும் முன் துறை** (அகம்:70:14)

**முழங்/கும் இரும் = நிரை நேர் நிரை**

**பௌவம் இரங்/கும் = நிரை நிரை நேர்**

என்னும் பாடலடியில் வரியில் வஞ்சியுரிச்சீர் பயின்று வருவதைக் காணலாம். ஆனால் அகநானூற்றுப் பாடல்கள் அனைத்தும் ஆசிரியப்பாவால் ஆன அகவலோசையைக் கொண்டதனால் சீர் அடிப்படையில் அகநானூற்றுப் பாடல் அடிகளைப் பிரித்துப் பொருள்கொண்டாலும் ஓசை அடிப்படையில் தூங்கல் வண்ணம் இடம்பெறவில்லை.

### ஏந்தல் வண்ணம்

ஏந்தல் என்றால் மிகுதல். மிகுதல் என்பது மீண்டும், மீண்டும் வருதல். ஒரு சொல் மீண்டும் வந்து சிறப்பது ஏந்தல் வண்ணம் ஆகும்

**சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்** (தொல்:1486)

என்னும் நூற்பா இதனைப் பதிவு செய்துள்ளது. அகநானூற்றில்,

**பொருளே காதலர் காதல்**

**அருளே காதலர் என்றி நீயே!** (அகம்:53:15-16)

**புலி புலி என்னும் பூசல் தோன்ற** (அகம்:48:7)

என்னும் பாடலில் ஏந்தல் வண்ணம் வருவதைக் காணலாம்.

### உருட்டு வண்ணம்

நெகிழாமல் உருண்டு ஓடும் ஓசை நயத்தைக் கொண்டிருப்பது உருட்டு வண்ணம் ஆகும்.

**உருட்டு வண்ணம் அகாரந் தொடக்கும்** (தொல்: 1487)

என்னும் நூற்பா வழி விளக்கியுள்ளார் தொல்காப்பியர். அகநானூற்றில் இவ்வகை வண்ணம் இடம்பெறவில்லை.

### முடுகு வண்ணம்

நான்கு சீர்களுக்கு மேல் அமைந்து உருட்டிச் செல்லும் ஓசையில் அமைந்து வருவது முடுகு வண்ணம் ஆகும். இதனை

**முடுகு வண்ணம் முடிவறி யாமல்**

**அடியிற் தொழுகி அதனோர் அற்றே** (தொல்:1488)

என்னும் நூற்பா வழி பதிவு செய்துள்ளார் தொல்காப்பியர். அகநானூற்றுப் பாடல்களில் முடுகு வண்ணம் பயின்று வரவில்லை.

### நலிபு வண்ணம்

ஆயுத எழுத்துப் பயின்று வருவது நலிபு வண்ணம் ஆகும். இது அடிவயிற்றிலிருந்து எழும் ஒலியாகும். இசைப்பாடல்கள் இவ்வண்ணத்தைக்கொண்டு பாடப்படுவது இல்லை.

**நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்** (தொல்: 1439)

என்னும் நூற்பா இதனை எடுத்துரைக்கின்றது.

**முதுமை எள்ளல் அ.்.து அமைகும் தில்ல** (அகம்:6:15)

**செய் வினைக்கு அகன்ற காலை எ.்.கு உற்று** (அகம்:29:5)

என்னும் பாடலில் ஆய்த எழுத்துப் பயின்று வந்து நலிபு வண்ணமாய் நிற்பதைக் காணலாம்.

### முடிவுரை

வண்ணம் என்னும் செய்யுளுறுப்பு இயற்றமிழுக்கு மட்டும் உரியதாக இல்லாமல் இசைத்தமிழுக்கும் உரியதாக இருக்கின்றது. இருப்பினும் ஓசை நயம் தொல்காப்பியர் கூறும் இலக்கண அடிப்படையில் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. தொல்காப்பியர் கூறும் இருபது வகை வண்ணங்களில் பதினெட்டு வண்ணங்கள் தொல்காப்பியர் கூறிய இலக்கண வரைமுறைப்படி அகநானூற்றுப் பாடலில் வருவதைக் காணலாம். தொல்காப்பியர்

குறிப்பிடும் உருட்டு வண்ணம், முடுகுவண்ணம் ஆகிய வண்ணங்கள் அகநானூற்றில் இடம்பெறவில்லை.

**பயன்பட்ட நூல்கள்**

1. வாழ்வியற் களஞ்சியம், ப:323.
2. பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி, ப:408.
3. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப:521.
4. தொல்காப்பியத்தில் வண்ணம், ப:11.
5. தமிழிசைக் கலைக் களஞ்சியம், ப:87.
6. தொல்காப்பியத்தில் இசை தொன்மையும் தொடர்ச்சியும், ப:319.
7. சிலப்பதிகாரம், ப:20-64.
8. யாப்பருங்கலக்காரிகை, ப:160-161.
9. குறுந்தொகை ப: 231:1-2.
10. குறள்: 391.